உ



# ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்பாள்

## மகிமை

பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகதின வெளியீடு

24-03-2005

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

மாவை ஆதீனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



22 OCT 2021

# ஸ்ரீமஹாலக்ஷ்மி மகிமை

**மாவையாதீன வெளியீடு**

மாவையாதீன இளவரசு

**து.ஷ.இரத்னசபாபதி சிவாசார்யர்**

கலியுகம் ருகoச ,ாதாரண வருடம் பாற்குண மாதம் கஉ ம் நாள்

உத்தர நக்ஷத்திரம் ~ சுக்கிரவாரம்

**(25.03.2005)**

Public Library
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
22 OCT 2021
[stamp text illegible]

உ

குகமயம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

# ஸ்ரீ மஹாலக்ஷ்மிஅம்பாள்

ஆகாயத்தின் வெளி " *சப்தமாகவே*" உருவானது. அதனது சூக்கும ரூபத்தைத்தான் பௌதீகர்கள் இன்று ஸ்பேஸ் (Space) எனக் கூறுகிறார்கள். பிரளய காலங்களில் ஒலி, அகங்காரம், மஹத், ரேகிருதி எனும் மூலக் கருவாக வீர்யத்தோடு மாற்றம் பெற்று, பின்னர் அடங்குவதும், அது பின்பு ஓர் உந்து சக்தி மூலம் வெளிப்படும்போது பிந்து வடிவில் வேறு சில பிந்துகளோடு கலந்து பீஜநிலை பெறுகிறது. பீஜ நிலையிலுள்ள பரா எனும் சக்தியின் நாதபிந்து ஸ்வரூபம் **பரா, பஸ்யந்தி, மத்யமா** என்ற நிலைகட்கு அப்பாற்பட, **வாக்தேவி, உத்தீர்ணா** எனும் நிலையில் ஒளிமயமாக அச்சக்தி பிரகாசிக்கிறது என அறியப்படுகிறது. இந்த சக்தியைத்தான் **மஹாசக்தி** என்பர். **ஆதாரசக்தி** எனவும் கூறுவர்.

மூலாதாரத்திலிருந்து வெளிப்படும் குண்டலினி சக்திக்கு மூன்று பிரிவுகளுண்டு. இதனை வேதங்கள், **மஹீ, இளா, சரஸ்வதி** எனவும், யோகத்தில் இடை, பிங்கலை, சுஷூம்னா என்றும் கூறப்படுகிறது. இந்த ஆகாய வெளி சுஷூம்னாதான். சுக்லபக்ஷங்களில் தினமும் பிரகாசம் கொடுத்து சந்திரனை பதினாறு கலைகளுடனும் கூடிய ஓர் பூர்ணிமையாக மாற்றுகிறது. இந்த கலைகள் தரும் அமிர்தம் தான் தேவ, மனித, மற்றும் உயிரினங்களைக் காத்து நிற்கிறது.

சுக்ல பக்ஷத்தில் வெளிவரும் சந்ரகலை கிரணங்கள் ஒவ்வொரு நாளும் பிரகாசந்தந்து உலகினை உயிர் வாழச் செய்கிறது. கிருஷ்ண பக்ஷத்தில் குறைந்து குறைந்து தெறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர கலைகளால் உயிரினங்களைப் பாதிக்கும் உடல் அவஸ்தைகள் கெட்டொழிகின்றன. அமாவாசையன்று தனியொரு கிரணம். அது தனித்து பிதிரர்கட்கு ஆகாரமாகிறது. எனவே, எமது உடலிலும் **சகஸ்ராரம்,** சந்ரமண்டலமாக அமைந்து அமிர்தத்தை வர்ஷிப்பது போல, உலகிற்கும் சந்ரமண்டலம் அமிர்தத்தை வர்ஷிக்கிறது. மனிதனது நாபிக்கமலத்தில், பூமலக்ஷ்மி மகாலக்ஷ்மி, ஸமேத மஹாவிஷ்ணு வீற்றிருந்து அமுதசுரபியாக அமைந்து உடலுக்கும் உள்ளத்திற்கும் உய்வு தந்து நிற்கின்றன என குண்டலினி பூசைகள் தரவுகள் தருகின்றன. ஒரே சக்திதான் சமஷ்டியாக பல சக்திகளாக பரிணமிக்கிறதெனவும், அவ்வாறு பலவாகப் பர்ணமித்த சக்திகள் குறிப்பிட்ட விசேஷ ரஸங்களைத் தான் அமோகமாக வர்ஷிக்குமென தேவீ மஹாத்மியம் சுட்டிக் காட்டுகிறது. சக்தி பூசை வழிபாடுகளிற்காக எழுந்த தேவீசூக்தங் களும் இவ்வாறு அறியத் தருகின்றன.

இந்தச் சந்திர கலைகளுள் இணைந்துள்ள சக்திகளுள் மஹாலக்ஷ்மியும் ஒன்றாகும். மஹாலக்ஷ்மிக்காக எழுந்ததுதான் ஸ்ரீசூக்தம் அதில்,

"ஹிரண்ய வர்ணாம் ஹரிணீம் ஸுவர்ண
ரஜ தஸ்ரஜாம் சந்ராம் ஹிரண் - மயீம்
லக்ஷ் மீம் ஜாதவேதோம ஆவஹ"

என்ற ஆரம்ப வரியில்,

" அக்கினி தேவனே, பொன் போன்ற காந்தியையுடையவளும், பாவங்களைப் போக்குபவளும், பொன், வெள்ளி ஆபரணங்களை அணிந்து சந்ரபிம்பமாக விளங்கும் மஹாலக்ஷ்மியை எனக்கருள் தர எழுந்தருளச் செய்வீர்" என அழைக்கப்படுகிறது.

மஹாலக்ஷ்மிக்காக எழுந்த ஸ்ரீசூக்தம் முழுவதிலும் மனிதன் மஹாலக்ஷ்மியின் அருள் வேண்டி இரங்கும் ஆகர்ஷண மந்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய உண்டு. இருபத்தொன்பதாவது மந்திரத்தில் மஹாலக்ஷ்மியை பாற்கடல் அரசனின் புத்திரி என்றும், ஸ்ரீரங்கநாயகியாகவும், தேவஸ்திரிகளை பணிப்பெண்களாகக் கொண்டவளும், உலகிற்கு தீபம் போன்று இந்திரன், சிவன், பிரம்மா ஆகியோரது பெருமைகட்கு காரணமானவளும் என்றும், மூவுலகையும் குடும்பமாகக் கொண்டு
தாமரைத் தடாகத்தில் பிரியமாகி முகுந்தனுக்குப் பிரியமானவளுமான மஹாலக்ஷ்மியே வந்தனம் செய்கிறேன் என உண்டு.

பாற்கடலில் அமுதத்திற்காகக் கடையும்போது எவ்வாறு மஹாலக்ஷ்மி உருவெடுத்ததென்றும், மஹாவிஷ்ணு அவளைத் தனது இருதய கமலத்தில் ஏற்றி வைத்தார் என்றும், சிருஷ்டி, திதி, சம்ஹாரம் என்பனவற்றிற்கு பிரம்மா, விஷ்ணு, உருத்திரரோடு இணைந்து செயற்படுபவள் என்றும், இந்த ஸ்ரீசூக்த மந்திரங்கள் மூலம் உணரப்படுகிறது. பல்வேறு சிந்தனைகளைக் கொண்ட மனித ஜீவன்களுக்கு அவரவர் விரும்பும் மார்க்கத்தில் திருவருள் சொரிய, மஹாலக்ஷ்மீயே, நீ சித்தலக்ஷ்மீயாகவும், மோக்ஷலக்ஷ்மீயாகவும், ஜயலக்ஷ்மியாகவும், ஸரஸ்வதியாகவும், ஸ்ரீயாகவும், வரலக்ஷ்மீயாகவும் பிரசன்னமாக வேண்டுமென ஸ்ரீசூக்தம் முப்பதாவது மந்திரம் வெகுமானசீகமாக அழைக்கின்றது. வரம், அங்குசம், பாசம், அபய முத்ரா என்பனவற்றோடு தாமரை மலர்மீதிருந்து கோடி உதய சூர்ய பிரகாசமாக முக்கண்ணோடு ஜெகதீஸ்வரியாகவும், ஆதிசக்தியாகவும் காட்சி தரும் மஹாலக்ஷ்மியை, நாராயணியை நமஸ்கரிக்கின்றேன் என இறுதி மந்திரம் அமைகின்றது.

பூமண்டல வாழ்வியலுக்கு மஹாலக்ஷ்மியினது அருளும், அருட் காந்தசக்தி மூலம் அனுக்கிரஹமும் இணைந்தே உய்வு தருகிறது. அளவு கடந்த பற்றுக்களைக் கொண்டு வாழ முற்படும் ஜீவன்களுக்கு அவரவர் வேண்டிய அருட் பிரசாதங்களை நல்கவே, ஆதிலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, தைர்யலக்ஷ்மி, கெஜலக்ஷ்மி, ஸந்தானலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனலக்ஷ்மி என்ற எட்டு பிரிவுகளால் வேறு வேறாக அருள் முகூர்த்தம் கொண்டு எவரெவர் எதுவேண்டுமென நினைந்து மானசீகமாக வசீகரித்து வேண்டுதல் செய்கிறார்களோ அவரவர்களுக்கெல்லாம் அவர் தம் இஷ்ட சித்தி வரங்களைத் தருவதற்காகவே இம் முகூர்த்தங்கள் எழுந்தன.

இந்து சமய வரலாற்றில், ஜீவராசிகள் மெஞ்ஞான ரீதியில் தெய்வீக அருளை வேண்டி நிற்கையில் அவ்வருளானது தெய்வங்களது பிறிதொரு மூலத்திலிருந்தே பெறப்படுகின்றது என

இருக்கு வேதம் குறிக்கிறது. இயற்கை ஆற்றலைப் பெண்மைத் தத்துவமாக உருவகிக்கும் சிந்தனை ஆற்றல்கள் வேதங்களில் காணப்பட்டாலும், தாந்திரீகக் கோட்பாடுகளாலேயே சக்தி வழிபாடு முதன்மை கொண்டது. காலஞ் செல்லச் செல்ல இவ்வழிபாடு விரிவானது. முதன்மைத் தெய்வமாகவும் சக்தி வழிபாடு மாறின. சக்திகளின் ஓர் பிரிவான அம்பிகையின் அடைமொழியான காதம்பரி (மூலிகைவனம்) தாவரங்களோடு தொடர்புடையதாய் தாவரங்களது தெய்வீக சக்திகளையூட்ட சக்தி சிவனோடு கலந்திருக்கிறதென்றும் கருதப்படுகிறது. இந்த தாவரங்கள் கூட உயிர் வாழ்வதற்கான ஔஷதங்களையும் கொள்ள அருள்பாலிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு சக்தியான துர்க்கையை அம்பிகை யென்றும் அழைப்பதுண்டு.

இந்த அம்பிகையின் நெற்றியிலிருந்து காளியும், காளி யிலிருந்து சாமுண்டியும் தோன்றியதாகப் புராண வரலாறுகளுண்டு.

இதிகாச புராணங்களில் கூட சக்தி தத்துவ சிந்தனைகள் மஹாதேவியின் சிறப்புக்களையே சுட்டிக் காட்டுகின்றன. வைஷ்ண வத்தில், ஸ்ரீ, பிகு, சரஸ்வதி, ப்ரிதி, கீர்த்தி, சாந்தி, துஷ்டி, புஷ்டி, எனும் எண்வகை சக்தி தத்துவங்களூடாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனது காக்கும்சக்தி ஏற்றங்கொண்டு நன்மைகளை தருகின்றன என நிச்சயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சக்திமார்க்க வழிபாடுகளில் ஈடுபடுபவரை சாக்தர்கள் என அழைப்பர். மனித சக்தி வழிபாட்டில் சக்திவழிபாடு பெரும் செல்வாக்கைச் செலுத்தியமையை தேவி சூக்தங்கள் மூலம் அறிய முடிகிறது. சக்தி வழிபாட்டின் தோற்றம்மூலம் சப்த மாத்ருக்கள் எனும் ஏழு கன்னியர்களது வழிபாடும் எழுந்தது. பிராமி (சரஸ்வதி), மாஹேஸ்வரி (சிவசக்தி) கௌமாரி (குமாரசக்தி) வைஷ்ணவீ (மஹாலக்ஷ்மி) வாராஹி, மாஹேந்ரி (இந்திராணி) சாமுண்டி எனும் சக்தி பிரவாகம் முறையே பிரம்மா, சிவன், ஸ்கந்தன், விஷ்ணு, வராகமூர்த்தி, இந்திரன், யமன் என்போரது சக்திகளாக அமைந்து வேண்டுவோருக்கு வரமளிக்கும் தன்மைகளை இணைத்துக்கொண்டன. சக்திவழிபாட்டுத் தன்மைகள் ஏராளமாக அமைந்திருப்பினும் அவையாவும் ஒருங்கிணைத்து நவராத்திரி காலத்து சக்தி வழிபாடான துர்க்கா, லக்ஷ்மி சரஸ்வதி பூசைகளில் கலந்துவிட்டன. இப்பூசைகளிற்தான் சக்தி பூசைகள் வலிமை ஸ்திரம் கொண்டன. தற்காலங்களில் நவராத்திரி பூசை மேலோங்கி வருவதும் கண்கூடு. மஹாலக்ஷ்மியை கஜலக்ஷ்மி யெனவும், திருமகள் எனவும், நாராயணீயெனவும் பூஜிக்கப்படுகிறது. தியான ரூபத்தில்

" சதுர்புஜம் த்விநேத்ராம்ச வராபய கரான்விதாம்
காத்வயத்ருதாம் போஜாம் க்ருதபங்கேர ஹாஸநாம்
ஸ்வர்ண கலகோபேத கஜயுக்மேன பார்ஸ்வயோ
க்ருதாபிஷிக்தாம் பத்மாம் தாம் கஜலக்ஷ்மி முபாஸ்மகே"

இரு நேத்ரங்களும், நான்கு கரங்கள் கொண்டு, அக்கரங்களில் தாமரை மலர்களையும், முன் இரு கரங்களில் அபய வரத முத்திரைகளோடும் இவரது இரு பக்கங்களிலும் தங்கக் கலசங்களையுடைய இரு யானைகளினால் கங்கா தீர்த்த அபிஷேகம் பெறப்படுபவராகவும், அத்தகைய கஜலக்ஷ்மியை வணங்குகின்றேன், என இத்தியானம் அறியத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த்யானம்

"யாஸாபத்மாஸனஸ்தாம் விபுலகடிதட பத்மாபத்ராய
தாக்ஷி ஙம்பீராவர்த்தநாபி ஸ்தனபரநமிதா சுப்ர
வஸ்துரோத்தரீயா லக்ஷ்மீர் திவ்யைர் ஙஜெந்திரியை
மணிஙனகசிதை ஸ்நாபிதா ஹெமகும்பைஹி நித்யம்ஸா
பத்மஹஸ்தாம் மவஸதுதிக்கிரஹே ஸர்வமங்காலய யுக்தா"

"சுத்தலக்ஷ்மீர் மோக்ஷலக்ஷ்மீர் ஜயலக்ஷ்மீஸ் ஸரஸ்வதீ
ஸ்ரீர்லக்ஷ்மீர் வரலக்ஷமீஸ்ச பிரஸன்னா மமஸர்வதா
சதுர்புஜாம் மஹாலக்ஷ்மீம் ஜகத்புஷ்டி கராம்ஸ்பாம்
த்யாயேத் பத்மாக்ஷீ வரதாம் திர்லோக்ய சுகதாயிணீம்"
எனவும் தியானங்களுண்டு.

சில்பரட்ணம் எனும் சிற்பநூலில் ஸ்ரீ மகாலக்ஷ்மியை

"முக்தாகவ்ரைஸ் சதுர்பிர் துவியபதிபிரதோ
புஷ்டகரொத்யத் கடாஸ்யாம்
நிர்யத்ரத் நாபிஷிக்தா கரகமலலஸத்
பத்ம யுக்மாபயெஷ்யா"

"நாநாகல்பா பிராமாத்ருத கனகநியா
ரத்னபம் கெருஹஸ்தா
ரம்யாம்கி சுப்ரசன்னா விதரது விபுலாம்
ஸந்ததம் ஸ்ரீம் சிரியம்வஹ"

அழகுதெய்வமான திருமகள் செந்தாமரையில் வீற்றிருந்து செம்பொன்னைப் போன்ற திருமேனி நிறத்தோடு கவர்ச்சிகரமான திருமேனியுடனும், அருளே வடிவெடுத்தாற் போன்று, எண்ணிறந்த ஆபரணாதிகளுடன் அற்புதக் காட்சிதருகிறாள். தாமரை.மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நான்கு கைகளும் அக் கைகளில் தாமரை மலர்களைத் தாங்கியவாறு அபயவரத முத்திரைகளோடு காட்சி தருபவள். முத்துப் போன்ற மென்மையான யானைகள் தமது துதிக்கையை உயரத் தாங்கியவாறு அக்கையில் குடங்களை வைத்துக் கொண்டு இரத்தினங்களை மழை பொழிவது போன்று அபிஷேகம் செய்யும். இத்தகைய திரிலோக செல்வங்களைப் பெறப் பிரார்த்திப்போமாக.

"சுப்பிஹேப த்வய புஷ்கரேரிதகடம்
ஸ்ச்யோத தீவி சுத்தோதகைஹி
ஸ்நாயனதி மதிஹ்ருதீய ரூபவிபவாம்
நீலோல்ல சத்குந்தலாம்
சுப்ராகல்ப விஷேச விப்ர மரஸாம்
உத்தப்த ஹெம ப்ரபாம்
வந்தே பாகுயுக ப்ரசத்த கமலாம்
தேவீம் ஸரோ ஜாஸநாம்"

வெண்மையான இரு யானைகளது துதிக்கைளினால் கவிழ்க்கப்பட்ட குடங்களினின்றும் பெய்கின்ற பரிசுத்தமான ஜலங்களினால் ஸ்நானத்தை பெறுபவள். கவர்ச்சிகரமான அழகுடையவள். கருமையான கூந்தலோடு வெண்மையான ஆபரணங்களைத் தரித்தவள். தங்கம் போன்ற மேனியும் தாமரை மலர்களை ஏந்தியவாறு தாமரை மலரில் வீற்றிருக்கும் மஹாலக்ஷ்மியை வணங்குவோமாக எனவுமுண்டு.

அளவுமீறியுள்ள ஜீவராசிகளது ஷேமங்கட்காக ஆதிசக்தியின் விரிவுகொண்டு அஷ்டலக்ஷ்மியாக பரிணாமங்கொண்டு பிரார்த்திக்க லக்ஷ்மிகடாக்ஷம் அருள்பாலித்துள்ளது. ஒருகால் சங்கராசார்ய சுவாமிகள் தமது பிரம்மகார்ய தர்மப்படி பிக்ஷையெடுத்து வருங்கால் ஓர் துவாதசி தினத்தன்று ஏழைப்பிராமணர் வீட்டிற்கு பிக்ஷையெடுக்கப்போனார். அப்பிராமணரும் பிக்ஷையெடுத்து உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்பவர். அன்று அவரும் வெளியே போய்விட்டார். சங்கரர் அவ்வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பதை அவ்வீட்டு இல்லத்தரசி பார்த்து விட்டு " வீட்டில் ஏதேனும் இல்லையே. இந்த உத்தமருக்கு பிசைஷயிட வேண்டுமே" என ஏங்கி அன்று துவாதசி பாரணைக்காகத் தான் வைத்திருந்த ஓர் நெல்லிக்கனியை அவருக்கு உணவாக அளித்தாள். சங்கரர் அவ்வீட்டு வறுமையை உணர்ந்து இவர்கள் பாரணைக்காக வைத்திருக்கும் ஒரே ஒரு நெல்லிக்கனியை இந்த புனிதவதி தருகிறாளே" என நொந்து, இரங்கி, இவர்கட்கு அருள் கிடைக்க வேண்டுமென மஹாலக்ஷ்மியை நினைந்து "கனதார"எனும் தோத்திரத்தை மனமுருகிப் பாடிவேண்டினார்.

அந்த ஏழைப் பிராமணருக்கு உடனேயே மஹாலக்ஷ்மி அருள் பாலித்து ஐஸ்வர்யம் உண்டாக அனுக்கிரகம் செய்தபோது, ஓா அசரீரி " இவர்கள் முற்பிறவியில் செய்த பாவங்கள் தான் இப்போது இந்த வறுமையைக் கொடுத்தது. எனவே இந்த வறுமை மாறமாட்டாது" எனக் கூறிற்று. சங்கரரோ எனது திருஷ்டியாலும், "என் இரந்து நிற்கும் பிரம்ம கார்ய தர்மத்தின் துணையோடு அப்பெண்மணி தனது விரத பாரணைக்காக வைத்திருந்த அந்த ஓரே ஒரு நெல்லிக்கனியை உதவிய தர்மத்தாலும் முன்வினைப் பாவம் நீங்குக என வேண்டியும், இவர்களுக்கு புண்ணியச் செயல்களில் ஈடுபட வரம் தந்து அருள்வாயே தாயே!" எனச் சுவாமிகள் மஹா லக்ஷ்மியை இரந்தார். இரந்ததும் அவ் ஏழை வீட்டில் பொன்மழை பொழிந்தது. இலக்குமி கடாட்சத்தால் பொன் மழையாக சுரந்ததினால் அத்தோத்திரமும் **கனகதார ஸ்தோத்திரம்** ஆனது. இவ்வாறு இலக்குமி கடாட்சம் பெற்று ஏராளமானோர் தத்தம் வறுமைகளை ஒழித்துள்ளனர். ராஜாஜி, சுவாமி விவேகானந்தர், இராஜராஜசோழன், நந்திவர்மன், காளிதாசர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்.

***அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்***

என்றார் ஔவை. இறைவன் பெண்ணை ஓர் சக்தியாக வாழவே சிருஷ்டி செய்தார். ஒருவர் தமது வீட்டில் பெற்ற தாயை மஹா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஷ்மியாக ஒரு முறை அதுவும் விஷேசமாக துவாதசி தினத்தில் காலை மாலை நேரங்களில் வீழ்ந்து வணங்கி பூசிக்கிறாரோ அவர் மஹாலக்ஷ்மி கடாட்சத்துக்கு ஆளாகுவார். தந்தையை அன்று மஹாவிஷ்ணுவாகவும் கருதி வழிபட வேண்டும். அவ்வாறு பன்னிரண்டு துவாதசியில் ஆற்றும் வழிபாடுகளால் வறுமை ஒழியும் என வேதங்கள் கூறும். தைத்திரியோபநிஷதம் தாயை ஈஸ்வரி யாகவும், மஹாலக்ஷ்மியாகவும் கருதி பாதமலர் இட்டு வணங்கு என ஆணையிடுகிறது. மஹாலக்ஷ்மி சக்தியைத்தான் எகிப்பத்தில் **இசிஸ்** என்றும், தென்னாசியாவில் **சிபில்** என்றும், சிரியாவில் **அஸ்தாக்** என்றும், அன்னை ரூபத்தில் வழிபடும் வழமையுண்டு.

வேதகாலங்களில் பூர்ணமான குத்துவிளக்கில் இறைவனை நினைந்து தீபஜோதியில் இறை வழிபாடு செய்தமையை இன்று திருவிளக்கு பூசை என்று கூறுவர். ஓர் வீட்டில் நெய் ஊற்றி நூல் திரி இட்டு ஏற்றிய திருவிளக்கு ஒளி படருமானால் அந்த ஒளி மூலம் மஹாலக்ஷ்மியின் திருவருள் வந்தடையும் என தேவி சூக்தங்களும் வேதசிவாகமங்களும் அறியத்தருகின்றன. இந்த திருவிளக்கு ஒளியை அருட்ஜோதி தெய்வம், ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதி,எழிற் சுடரான மூர்த்தி, தையலார் கொண்டாடும் தொல்கார்த்திகைத்திரு, என்றெல்லாம் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பக்தி பூர்வமாக ஏற்றித் தொழுதனர். எமது உடம்பிலுள்ள இருளான அறிவை அகற்றித் துலக்க வேண்டுமாயின் அது திருவிளக்கின் ஒளியால் இருள் அறிவு அகன்று மெஞ்ஞான அறிவு பிறக்கும். மெஞ்ஞான அறிவால் தானும் உயர்ந்து உலகையும் உய்விக்க இயலும். தேவி பராக்கிரமம் தேவிபாகபதம் என்பன மஹாலக்ஷ்மியின் பிரபந்தங்களை நன்கு விளக்குகின்றன.

மஹாலக்ஷ்மியை மூலவிக்கிரகமாகக் கொண்டுள்ள ஆலயங்கள் ஆதியில் மிகக் குறைவு. இப்போ இந்த நிலை மாறி வருகிறது.

வாழ்வு பெற்ற வல்லி மாருதப்புரவல்லியின் மாவிட்டபுரம் கந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகோவிலில் ஏழாம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பிரகார மஹாலக்ஷ்மி அம்பாளது பாலஸ்தாபனம் தாரண வருடம் தை மாதம் 14ம் நாள் (27.01.2005) குரு வாரத்தன்று நடைபெற்று பங்குனி மாதம் 12ம் நாள் (25.03.2005) பங்குனி உத்தரமும் சுக்கிரவாரமும் இணைந்த சுபதினத்தில் கும்பாபிஷேகம் இடம்பெறுகிறது.

மஹாலக்ஷ்மி திருக்கோவில் முழுவதும் புதிதாக அமைக்கப்பட்டு ள்ளது. இத்திருக்கோவிலை நிர்மாணிக்க ஆலோசனைகளை நடாத்திய சமயம், ஓர் தினம் திரு.இராஜநாதன் இராஜசிங்கம் அவர்கள் ஆலய வழிபாட்டிற்கு வந்த சமயம், மஹாலக்ஷ்மியின் திருக்கோயிலைத் தமது உபயமாகப் புதிதாக நிறுவித் தருகிறேன் என எமக்கு அறியத்தந்து, அதற்கான முழுச்செலவுப் பெறுமானமான மூன்று இலட்சம் ரூபாவையும் வழங்கி, இப்பெரும் தொண்டிற்கு உதவியமையும் இறைவன் திருவருள் துணையேயாம். 27.01.2005 இல் உடனேயே ஆரம்பமான இக்கோவில் நிர்மாண வேலைகள் 20.03.2005 இல் பூர்த்தியாகி 25.03.2005 இல் கும்பாபிஷேகமும் ஏற்கிறது. கும்பாபிஷேக வைபவத்தையும் இப்பெரியாரே முன்னின்று நடாத்துகின்றார்.

சிவதர்மங்களை ஆற்ற அதற்கும் விதிவழி, இறைவன் திருவருள், தவப்பயன், விருப்பு என்றெல்லாம் இணையவேண்டும். இவ்வாறு ஆற்றுவதற்கான மனம் உந்துவதற்கும் எத்தனையோ தவப்பயனும் வேண்டும். அரும் கொடையாக அமைந்திருக்கும் இந்த மஹாலக்ஷ்மி கோவில் நிர்மாணமும், அதனைச் சார்ந்த கும்பாபிஷேக வைபவத்தையும் தமது புண்ணிய கைங்கர்யமாக ஏற்று ஞாலம் எல்லாம் இதனூடு இறைவன் திருவருள் நினைந்து உலகம் நிறைவாக செழித்தோங்கவேண்டுமென சதா எண்ணும் உயர்திரு இராஜநாதன் இராஜசிங்கம் போன்று யாமும் அவ்வாற பிரார்த்திக்கின்றோம். இத் தவப்புதல்வன் நீடூழி வாழ்ந்து நிறைந்து திருவருட் பேறுகளைப் பெற ஸ்ரீ மஹாலக்ஷ்மி அம்பாளது அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

"மஹாலக்ஷீச வித்மஹே விஷ்ணுபத்னீச தீமஹீ
தன்னோ லக்ஷிபிரசோயாத்" (காயத்ரி)

*சுபம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம்

## 1.ஆதிலக்ஷ்மி

ஸுமநஸ வந்தித ஸுந்தரி மாதேவி
சந்த்ர ஸஹோதரி ஹேமமயே
முநிகண மண்டித மோக்ஷ ப்ரதாயிநி
மஞ்ஜுள பாஷிணி வேதநுதே
பங்கஜ வாஸிநி தேவஸு பூஜித
ஸத்குண வர்ஷிணி சாந்தியுதே
ஜய ஜய ஹேமதுஸூதந காமிநி
ஆதிலக்ஷ்மி ஸதா பாலயமாம்.

## 2.தான்யலக்ஷ்மி

அயிகலி கல்மஷ நாசிநி காமிநி
வைதிக ரூபிணி வேதமயே
க்ஷீர ஸமுத்பவ மங்கள ரூபிணி
மந்த்ர நிவாஸிநி மந்த்ரநுதே
மங்கள தாயிநி அம்புஜ வாஸிநி
தேவக ணாச்ரித பாதயுதே
ஜய ஜய ஹேமதுஷூதந காமிநி
தான்யலக்ஷ்மி ஸாத பாலயமாம்.

## 3.தைர்யலக்ஷ்மி

ஜயவர வர்ணி!நி வைஷ்வி! பார்கவி
மந்த்ர ஸ்வரூபிணி மந்த மயே
ஸுரகண பூஜித சீக்ரபல ப்ரத
ஜ்ஞான விகாஸிநி சாஸ்த்திர நுதே
பவபய ஹாரிணி பாப விமோசநி
ஸாது ஜநாச்ரத பாதயுதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜய ஜய ஹேமதுஸூதந காமிநி
தைர்யலக்ஷ்மி ஸதா பாலயமாம்

### 4.கெஜலக்ஷ்மி

ஜய ஜய துர்க்கதிநாசினி காமிநி
ஸர்வபல பாத் சரஸ்த்ரமயே
ரதஜக துரக பதாதி ஸமாவ்ரத
பரிஜன மண்டித லோகநுதே
ஹரிஹர ப்ருமஸூ பூஜித ஸேவித
தாப நிவாரனி பாதயுதே
ஜய ஜய ஹேமமதுஸூதந காமிநி
கெஜலக்ஷ்மி ரூபனே பாலயமாம்

### 5.ஸந்தானக்ஷ்மி

அயிக்க வாஹிநி மேஹிரநி சக்ரினி!
ராக விவர்த்திதி ஜ்ஞாளமயே
குணகண வாரிதி லோக ஹிதைஷினி
ஸ்வரஸ்ப்த பூஷிதகானநுதே
ஸ்கல ஸூராஸூ தேவ முநீச்வரா
மாநா வந்தித பாதயுதே
ஜய ஜய ஹேமதுஸூதந காமிநி
ஸந்தானலக்ஷ்மிது பாலயமாம்

### 6. விஜலக்ஷ்மி

ஜய கமலாஸநி ஸத்கதி தாயிநி
ஜ்ஞான விகாஸநி கானமயே
அனுதின மர்ச்சித குங்கும தூஸர
பூஸித வாஸித வாத்யநுதே
கனததரா ஸ்துதி வைபவ வந்தித
சங்கர தேசிக மான்யபதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜய ஜய ஹேமதுஸூதந காமிநி
விஜலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## 7.வித்தியாலக்ஷ்மி

ப்ரணத ஸுரேச்வரி! பாரதி! பார்க்கவி!
சோக விநாசநி! ரத்னமயே
மணிமய பூஷித கர்ண விபூஷண
சாந்தி ஸமாவ்ருத ஹஸ்யமுகே
நதிநிதி தாயிநி கலிமக ஹாரிணி
காமித பலப்ரத ஹஸ்தயுதே
ஜய ஜய ஹேமதுஸூதந காமிநி
வித்யாலக்ஷ்மி ஸதா பாலயமாம்

## 8.தனலக்ஷ்மி

திமிதிமி திந்திமி திந்திமி திந்திமி
துந்துமி நாதஸூதபூர்ணமயே
கும்கும குங்கும குங்கும குங்கும
சங்க நிநாத ஸூவாத்யநுதே
தேவ புராணே திஹாஸ ஸூபூஜித
வைத்திய மார்க்க ப்ரதர்சயுதே
ஜய ஜய ஹேமதுஸூதந காமிநி
தனலக்ஷ்மி ரூபனே பாலயமாம்

அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம் முற்றிற்று.

Public Library
Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அலைமகளே அருள் தருவாய் அம்மா

திருமகள் உனதருள் ஒளியினில் வையம்
குளிர்ந்தொளி நலந்தருமே
தீந்தமிழ் நாயகி உன்திரு நயன
ஒளிகொண் டெமையாள்வாய்
கருணை விழிமலர்ப் பார்வையில் எம்மையும்
கட்டியே அருள்புரிவாய்
கஜலட் சுமியே கார்மகில் வண்ணன்
தேவியே திருமகளே
இருகரம் குவித்துன் திருவடி பணிந்தோம்
இன்னருள் புரியுமம்மா
இளநகை காட்டியே உன்னருட் சிறகினில்
எம்மையும் அணைத்தருள்வாய்
வருமுயர் வாழ்வு மலர்ந்து மணம்பெறச்
செய்திடும் அலைமகளே
வனசம தில்ஒளி கூட்டி நலம்தரும்
ஸ்ரீமகா இலட்சுமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி நலம்பெறச் சித்திந லம்தரும்
தேவி திருமகளே
புகழொடு பெயரும் அழகும் நல்கும்
புதுமையின் உறைவிடமே
வித்தைந லம்தரும் சுத்தமுன் இருப்பிடம்
வித்தியா இலட்சுமியே
விந்தையு றும்வழி சிந்தைகு ளிர்ந்திடச்
செய்யுமுன் இன்னருளே
சத்து மிகுநிறை பாற்கடல் தோன்றிய
சந்தான இலட்சுமியே
சஞ்சலம் நீங்கிட வந்தொளி நல்கும்
சௌபாக்கிய இலட்சுமியே
முத்து நிகரொளி காட்டியே அருளும்
முகுந்தனின் தேவியரே
முளைபெறு நிலத்துள் தோன்றிய முத்தே
ஜனகனின் திருமகளே.

வாழ்வொளி காண வேண்டுமுன் இன்னருள்
வனசமதன் ஒளியே
வாக்கினில் சுத்தம் பேணிட வந்தொளிர்
சத்திய இலட்சுமியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வில்லா நிலையில் வாழ்ந்திட வழிதரும்
தானிய இலட்சுமியே
தரணியில் இல்லற மகிமையை உணர்த்தும்
சந்தான இலட்சுமியே
சூழ்ந்திடும் வறுமை தொலைந்திடும் அன்னை
திருமகள் பார்வையினால்
சுந்தர வாழ்வு மலர்ந்து மணம்தரும்
தனலட் சுமியருளால்
ஊழ்வினை தீரும் உயர்ந்திடும் வாழ்வு
அன்னையின் இன்னருளால்
உல்லாச வாழ்வு கண்டும கிழ்ந்திட
பணிந்திடு வீர்தினமே.

*கவியாக்கம்:*
*சு.குகதேவன்*
*கொல்லங்கலட்டி*

**இதில் காணப்பெறும் ஸ்தோத்திரங்களை அன்பர்கள் நாடோறும் ஓதிவரின் அவர்க்கு நேரும் இடர்கள் தீர்ந்து நலம் பெறுவர் என்பது ஸ்தோத்திரத்தின் உண்மைப் பொருளாம். மெய்யன்பர்களே ஓதி நற்பயன் பெறுவீர்களாக.**

**மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக்குருக்கள்**

*ஏழாலை மஹாத்மா அச்சகம் இல. 43, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை கந்தர்மடம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org